

வேலூர் தெற்கு மாவட்ட அவசர செயற்குழுக் கூட்டம் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமது சகி தலைமையில் நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக தெற்கு மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். நிகழ்ச்சியில் குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமுலுவிஜயன், மாவட்டப் பொருளாளர் தாமோதரன், மாவட்ட துணை செயலாளர்கள் மலர்விழி, ஜி.எஸ்.அரசு மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, ஒன்றிய கழக செயலாளர் ஞானசேகரன் மற்றும் நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### ‘வெல்வோம் இருநூறு படைப்போம் வரலாறு’ சூளுரையை நிறைவேற்றிட

# கழக பொறியாளர் அணியினர் அயராது பாடுபடுவோம்!

### அணியின் மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, மார்ச் 4-

தி.மு.க பொறியாளர் அணி யின் மாநில நிர்வாகிகள் கூட்டம் மாநில பொறியாளர் அணியின் தலைவர் துரை.கி.சரவணன் தலைமையில் மாநிலப் பொறியாளர் அணியின் செயலாளர் ஸ்.கே.பி.கருணா முன்னிலையில் 23.02.2026 திங்கள் கிழமை மாலை 5.30 மணியளவில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாநில பொறியாளர் அணியின் துணைச் செயலாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கீழ்க் கண்ட தீர்மானங்களில் ஒரு மனதாக நிறை வேற்றப்பட்டன.

திராவிட முன்னேற்றக் கழகத்தை தொடர் வெற்றிப்பாதையில் அழைத்துச் செல்லும் ஒய்வறியா சூரியன் திராவிட மாடல் நாயகர், கழகத் தலைவர் தாயுமானவர் முதலைமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு தி.மு.க. பொறியாளர் அணி தனது மனமார்ந்த பிறந்த நாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

கழகத் தலைவரின் 73வது பிறந்தநாளை முன்னிட்டு மாநிலம் முழுவதிலும் உள்ள பொறியாளர் அணி, மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் அமைப்புகள் அனைத்தும் அவரவர் பகுதிகளில் கழக கொடி ஏற்றி ஆதரவற்றோர் இல்லங்களில் உணவுகள் வழங்கி சிறப்பாக கொண்டாடுவது என தீர்மானம் நிறை வேற்றப்பட்டுகிறது.

என் வாக்குசாவடி வெற்றி வாக்குச்சாவடி ஓரணியில் தமிழ்நாடு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப்பணி (SIR) போன்ற களப்பணியில் களத்தில் நமது அணியினர் மாவட்டக் கழகத்துடன் இணைந்து சிறப்பாக பணியாற்றியதை மாநில பொறியாளர் அணியின் சார்பாக பாராட்டுகளையும் வாழ்த்து களையும் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

தேர்தல் களத்தில் போர் களம் போல கருதி திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணியில் ஐந்து லட்சம் நிர்வாகிகள் மற்றும் 50 இலட்சம் உறுப்பினர்கள் கொண்ட மாபெரும் இளைஞர் சக்தியை கட்டமைத்த கழக இளைஞர் அணிச் செயலாளர் இளந்தலைவர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் மாநில பொறியாளர் அணியின் சார்பாக இக்கூட்டத்தின் வாயிலாக தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் திராவிட மாடல் 2.0 மீண்டும் தொடர்ந்திட கழகத் தலைவர் அறிவித்திடும் வேட்பாளர்களுக்கு அவரவர் பகுதிகளில் மிகச் சிறப்பான தேர்தல் பணியாற்றி வெற்றிகளை குவித்திட இக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது. “வெல்வோம் இருநூறு படைப்போம் வரலாறு” என்ற தலைவரின் சூளுரையை நிறைவேற்றிட கழக பொறியாளர் அணியின் நிர்வாகிகள் அனைவரும் அயராது பாடுபட தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

திருச்சியில் மார்ச் 9 அன்று நடைபெறவுள்ள கழக நிர்வாகிகள் மாநாட்டில் பொறியாளர் அணியின் மாநில, மாவட்ட, மாநகர், ஒன்றியம், பேரூர், நகர கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

வேலூர், மார்ச்,4

வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு கூட்டம் மாவட்ட கழக பொருளாளர் சி.நரசிம்மன் தலைமையில், வடக்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் நாடாளு மன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் முன்னிலையில் நடைபெற்றது.

இதில் ஒன்றிய கழக, பகுதி கழக, செயலாளர்கள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர். இச்செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழுவிடம் வேலூர் வடக்கு மாவட்டம் சார்ந்த வளர்ச்சித் திட்டங்கள் குறித்து கோரிக்கைகளை சமர்ப்பித்து காட்பாடி மற்றும் கே.வி. குப்பம் சட்டமன்றத் தொகுதி சார்ந்த மக்களின் குரலாய் ஒலிக்க வேண்டும் நமது தலைமை கழகத்தால் மாநிலம் தழுவிய அளவில் மேற்கொள்ளப் பட்டுவரும் "வெல்லும் தமிழ்ப் பெண்கள்" பரப்புரையை துரிதமாக மேற்கொண்டு வரும் ஸ்டாலின் மகளிர் படை சார்ந்த மகளிர் பிரதிநிதிகளுக்கு உரிய ஒத்துழைப்பை தத்தமது பகுதிகளில் கழக நிர்வாகிகள் அளித்து பரப்புரை சீராக மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்ய வேண்டும். திருச்சியில் நடைபெறவுள்ள பிரமாண்ட கழக மாநாட்டில் வேலூர் வடக்கு மாவட்ட நிர்வாகிகள் மற்றும் உடன் பிறப்புகளின் ஏகோபித்த பங்களிப்பை உறுதிசெய்தல் வேண்டும்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.




வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டத்தில் மாவட்டக் கழக பொறுப்பாளர் – நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த் பேசினார். உடன் ஒன்றிய கழக செயலாளர், பகுதி செயலாளர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



வேலூர் வடக்கு மாவட்டம் காட்பாடி அடுத்த கசம் பள்ளியில் ஆதரவற்ற குழந்தைகளுக்கு மாநகராட்சி துணை மேயர் எம்.சுனில்குமார் கேக் மற்றும் பிரியாணி வழங்கினார். உடன் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் டிடாசரவணன், துணை அமைப்பாளர் சுரேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# தகைசால் தமிழரும்! தமிழ்நாடு முதல்வரும்!!




**‘கணையாழி’ தலையங்கம்!**

அரசியல் என்பது
அதிகார வெறிக்கான பாதை இல்லை!
மக்களுக்குத் தொண்டு செய்யும்
மகத்தான வாய்ப்பு என்று
நாம் வாழும் காலத்திலும்
வாழ்ந்து காட்டியிருக்கிறார்
தோழர் நல்லகண்ணு!

ஆடம்பர வாழ்க்கை இல்லை
ஆளுமைச் சண்டைகள் இல்லை
போராட்டக் களம் வளர்த்த
இளமையும் முதிர்ச்சியுமாக
நம் காலத்திய
அதிசயத் தலைவர்
தோழர் நல்லகண்ணு!

சிறை வளர்த்த சிந்தனைகள்,
மாற்றுக் கட்சியினரும்
மதிக்கும் எளிமை, நேர்மை,
அநீதிக்கு எதிரான போராட்டம் என்று
ஆளுமைப் பண்பால் வளர்ந்தவர்!

மனக்குறை இல்லா
மாண்புமிகு வாழ்க்கை ஒன்றை
வாழ முடியும் என்பதற்கு
வரலாறு ஆகியிருக்கிறார்!

குறைந்த கூலியில்
நீண்ட நேர உழைப்பு எனும்
தொழிலாளர் உரிமைச் சுரண்டலைக்
கண்டித்துப் போராடியவர்!

தனக்குச் சொந்தமாக
வீடு ஒன்று வேண்டாதவர்
வீடு இல்லா மக்களுக்காக
வீதியில் போராடியவர்!

நதி நீர் இணைப்புக்குப்
பாலமாய் நின்றவர்!
சுற்றுச் சூழலைக் காக்கும்
சமூகச் சூழலை உருவாக்கியவர்!

படிக்கவும் பேசவும் மட்டுமின்றிப்
பின்பற்ற வேண்டிய
வாழ்க்கையின் பாடமாக
வாழ்ந்து காட்டியிருக்கிறார்!

தனக்குக் கிடைத்த
கோடி ரூபாய் நிதியை மட்டுமல்ல
உடலையும் தானமாக்கி
மாணவர்களோடு
மக்களுக்கும் பாடமாகி இருக்கிறார்!

தோழர் நல்லகண்ணு
இலக்கு தெரிந்தவர்
வழி தெரிந்தவர்
வழி காட்டியவர்!

செயலில் வாழ்ந்த
தலைவர்கள் கொண்டாடும்
தோழமைக்கு உரியவர்!

பொருளுக்கு அலையும்
உலகில் அரசியலுக்கு
மெய்ப்பொருள் ஆனவர்!

மக்கள் மனமெனும்
சிகரங்களைத் தொட
பிரச்சினைகள் எனும்
பள்ளத்தாக்குகளில்
பக்குவம் பெற்றவர்!

தமிழ் உணர்வை
மதித்துப் போற்றியவர்!

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின்போது
அறிஞர் அண்ணா அறிவித்து
அதன்பின்
முத்தமிழ் அறிஞர் கலைஞரால் தொடங்கப்பட்ட
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனப்
பேராசிரியர்களும் பணியாளர்களும்
ஓய்வூதியமின்றி
உளைச்சலில் இருந்தபோது
முதல்வர் கலைஞரின்
கவனத்திற்கு எடுத்துச் சென்றவர்!

ஒரு குரலில்
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் பக்கம்
தலைமைச் செயலகத்தையும்
தமிழ் உலகையும் திரும்பச் செய்தவர்!
எப்படிச் செய்ய வேண்டும் என்று
பாடம் நடத்தாமல்
என்ன செய்ய வேண்டும் என்று
சிந்தித்துக் கொண்டிருந்தவர்!

அங்கீகாரத்திற்கு அலையாமல்
தனக்குத் தான்
நேர்மையாக இருந்தவரைத்
தலைமைப் பண்பு தேடி வந்தது!

தடைகளைக் கண்டுபிடித்து
முடக்கிப் போடாமல்
இலக்குகளைச் சென்றடையும்
வாய்ப்புகள் நோக்கிய
தீர்வுகளைக் கூறியவர்!

விளம்பர வேட்டையும்
வேட்கையும் இல்லாதவர்!

அவரது மதிப்பு
பதவிகளால்!
அளந்தறியப்பட முடியாதது

மக்கள் மனதில் பதிந்த
அவரது
கருத்துப் படிவம்!
கணக்கிட முடியாதது

எதை நம்புகிறேன் என்று
மக்களுக்கு எதிர்காலத்தைக் காட்டியவர்!

அரிய பண்புகளின்
கொள்கலனாக விளங்கிய
தோழர் நல்லகண்ணு அவர்களை
அவர்
வாழும் காலத்திலேயே
தகைசால் தமிழர் என்று
அடையாளப்படுத்தியவர்
தமிழ்நாடு முதல்வர்!

பெரியாரைப் போல
எந்தப் பதவியிலும் இருந்திராத போதும்
அவர் மறைந்ததும்
அரசு மரியாதைக்கு
ஆணையிட்டதிலும்
உடல் அருகே நின்று
வீர வணக்கம்! வீர வணக்கம்!
தகைசால் தமிழருக்கு
வீர வணக்கம்! என்று
கை உயர்த்திக்
குரல் உயர்த்தியதிலும்
முதல்வரின் முகத்தில்
வெளிப்பட்டன்
தகைசால் தமிழரின்
மாண்பும்
தமிழ்நாடு முதல்வரின்
பெருமிதமும்!
கூடவே
நினைவுக்கு வந்தது
முதல்வரின் பெயரும்!



**அன்புடன்**
**ம.ரா.**

நன்றி: **கணையாழி**
மார்ச் 2026